**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | |
|---|---|
| Case No. | : CC No.150/2020 |
| Deposition of witness for Prosecution | : P.W-7 |
| Name | : ராமகிருஷ்ணன், வயது 50 |
| Father Name/Husband Name | : வேலு |
| Village | : தொண்டையூர் |
| Taluk | : இளையான்குடி |
| Calling | : - |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of February 2025.

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தொண்டையூரில் வசித்து வருகிறேன். கடந்த 2012-2019 வரை டிராவல்ஸ் வைத்து நடத்தி வந்தேன். எதிரி யுவராஜா என்னிடம் இருந்த 4 வண்டிகளையும் மாற்றி மாற்றி ஓட்டுவார். எங்கள் ஊரில் இருந்து காமநாயக்கன்பட்டிக்கு திருவிழாவிற்காக 407 வீடியோ கோச்சை அனுப்பி வைத்தேன்.
2. மேற்படி வாகனம் கோவில்பட்டி ஏரியாவில் விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டு தெரிந்து கொண்டேன். வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. நீங்கள் இரண்டு வீடியோ கோச், இரண்டு குட்டியானை வண்டிகள் வைத்திருந்தீர்கள் என்றால் இருந்தது தற்போது இல்லை. உங்களிடம் 4, 5 டிரைவர்கள் வேலை பார்த்தார்கள் என்றால் சரிதான். டிரைவர்கள் விடுமுறை எடுத்தால் வெளியில் இருந்தும் ஆட்களை அழைத்து வேலைக்கு வைப்பீர்கள் என்றால் சரிதான்.

2. சம்பவ காலத்தில் வண்டியை யார் ஓட்டியது என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். உங்களை போலிசார் நாலாட்டின்புதூர் காவல்நிலையத்திற்கு வரச் சொல்லி விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.